தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

ஆண்டிறுதிப் பரீட்சை 2024

ஆண்டு: 4 திகதி: 23.11.2024

நேரம்: 02:00 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி சாந்தினி விஜயநாதன்
திருமதி உஷா ஜவாகர்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	20	
வினா 2	10	
வினா 3.1	10	
வினா 3.2	10	
வினா 4	10	
வினா 5	20	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	20	பக்கம்	2

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

உலகத்தில் பலவகைப் பறவைகள் வாழ்கின்றன. பெங்குயின் என்பதும் ஒரு வகைப் பறவை ஆகும். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்ஆபிரிக்கா, தென்அமெரிக்கா போன்ற நாடுகளில் பெங்குயின் பறவையை அதிகம் காணலாம். பெரும்பாலும் அவற்றின் முதுகுப்புறம் கறுப்பாகவும், அடிப்பாகம் வெள்ளையாகவும் காணப்படும். அது மீன்களையும், கடலில் வாழும் மற்றைய பிராணிகளையும் விரும்பி உண்ணும்.

பெங்குயின் பறவையால் பறக்க முடியாது. அதன் உடல் பெரியதாகவும், இறக்கைகள் சிறயவையாகவும் இருப்பதால் அதனால் பறக்க முடிவதில்லை. அது தன் இறக்கைகளைத் துடுப்புப்போல பயன்படுத்தித் தண்ணீரில் வேகமாக நீந்தும் ஆற்றல் உடையது. அது தரையில் நடக்கும்போது தன் கால்களை ஊன்றி நிமிர்ந்து செல்கிறது. அது அவ்வாறு நடப்பதற்கு அதன் கால்கள் உடலின் பிற்பகுதியில் அமைந்திருப்பதே காரணம். பெங்குயின்கள் முப்பத்தைந்து ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடியவை.

1. பெங்குயின் பறவையின் உணவு என்ன?

_____

2. எந்த நாடுகளில் பெங்குயின் பறவை அதிகம் காணப்படுகிறது?

_____

3. பெங்குயின் பறவை பறக்க முடியாமைக்குரிய காரணம் என்ன?

_____

4. பெங்குயின் பறவையிடம் காணப்படும் ஆற்றல் என்ன?

_____

5. பெங்குயின் பறவைகள் எத்தனை ஆண்டுகள் உயிர்வாழும்?

_____

வினா இல	2	புள்ளிகள்	10	பக்கம்	3

பின்வரும் சொற்களை வைத்துக் கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்.

பருவகாலங்கள், பொட்டு, தமிழர்கள், தமிழ்மொழி, ஆதிவாசிகள்

1. அம்மா சேலை உடுத்தி நெற்றியில் _____ வைப்பார்.

2. தற்போது _____ பல நாடுகளில் வாழ்கிறார்கள்.

3. எங்கு தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் _____ பேசி வாழ வேண்டும்.

4. அவுஸ்திரேலிய நாட்டின் பாரம்பரிய மக்கள் _____ ஆவர்.

5. அவுஸ்திரேலிய நாட்டில் நான்கு _____ உண்டு.

வினா இல	3.1	புள்ளிகள்	10	பக்கம்	4

பிரித்து எழுதுங்கள்.

1. கிழக்குக்கரை = _____ + _____

2. வாழ்க்கைமுறை = _____ + _____

3. விழாக்காலம் = _____ + _____

4. தலைமுறை = _____ + _____

5. மலர்வகை = _____ + _____

வினா இல	3.2	புள்ளிகள்	10	பக்கம்	4

சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வசனமாக எழுதுங்கள்

1. வந்தார் / சித்தப்பா / கன்பராவிலிருந்து / இரவு / நேற்று

_____

2. பறவை / மிகச் / சாந்தமான / மைனா

_____

3. கொண்டாடினோம் / மகிழ்வாகக் / நாங்கள் / தைப்பொங்கலை

_____

4. சுவையான / மாமி / தயாரித்தார் / சிற்றுண்டிகள்

_____

5. கதைகள் / நல்ல / கேட்கலாம் / தாத்தாவிடம்

_____

வினா இல	4	புள்ளிகள்	10	பக்கம்	5

பின்வரும் வாக்கியங்களைப் பன்மையில் எழுதுங்கள்

1. நாய் குரைத்தது.

_____

2. நான் பாடசாலைக்குப் போனேன்.

_____

3. ஆடு புல் மேய்ந்தது.

_____

4. மாணவன் வசதிக்கட்டணம் செலுத்தினான்

_____

5. மரம் முறிந்தது.

_____

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	6

நீர் உமது நண்பனுக்கு உமது தமிழ் பாடசாலை பற்றிக் கடிதம் எழுதுங்கள்.

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	7

பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 40 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுங்கள்.

1. எனது விடுமுறை
2. நான் வாசித்த கதை
3. நான் கொண்டாடிய விழா